Chundikuli Branch Library

Y.M.C.A

Registered as a News Paper     பக்கங்கள் 04     விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     Peoples Daily     மக்கள் தினசரி

## நன்கொடை என்றபேரில் பெரும் பணவேட்டை

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பிற்கு மாணவரை அனுமதிப்பதற்கு ஆயிரம் ரூபா முதல் ஐயாயிரம் ரூபா வரை நன்கொடை வழங்கப்படல்வேண்டும் என அதிபர்கள் வற்புறுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் புதிய அனுமதி கோரிச் செல்லும் மாணவர்களிடமே அதிபர்கள் இவ்வாறு (4 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 04     திருவள்ளுவர் ஆண்டு 2024     சித்திரை 16     [29-04-93]     வியாழக்கிழமை     ஓசை 70

# கொழும்பில் அரசிற்கெதிரான கலவரம்

# வாகனங்கள் தீக்கிரை; பொலிஸ் மீது தாக்கு

## லலித் இறுதிச் சடங்கில் மக்கள் ஆவேசம்

(கொழும்பு)

நேற்று மாலை இடம்பெற்ற லலித் அத்துலத்முதலியின் இறுதிச்சடங்கின்போது கொழும்பில் அரசிற்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வன்முறையில் பௌத்த விகாரை ஒன்று தாக்கப்பட்டதாகவும், அமைச்சரின் வீடு ஒன்றும் தாக்கப்பட்டதாகவும், பொலிஸ்வாகனங்கள் உட்பட பல வாகனங்கள் எரிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை ரூபவாகினி நிலையத்தை தாக்க ஆர்ப்பாட்டக்காரர் முற்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்து கலகம் அடக்குவதற்கென நிறுத்தப்பட்ட ஆயுதப்படையினர் துப்பாக்கிப் பிரயோகமும், கண்ணீர்ப்புகைப் பிரயோகமும் மேற்கொண்டதாகவும், இதன் காரணமாக ஒருவர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயம் அடைந்ததாகவும் மேலும் தெரியவருகின்றது.

நேற்று பிற்பகல் லலித்தின் இறுதி ஊர்வலம் ஆரம்பமானபோது ஆரம்பத்தில் அமைதியாக இடம்பெற்றதாகவும் பின்னரே கலவரம் மூண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கலவரத்தின்போது தீவைப்புச் சம்பவங்களும், கல்வீச்சு சம்பவங்களும் இடம்பெற்றதாகவும், இதன்காரணமாக பலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு அரசிற்கு எதிரான பலத்த கோஷங்கள் எழுப்பப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலகத்தில் ஈடுபட்டவர்கள் ஐக்கியதேசியக் கட்சியின்மீதும் பொலிசார் மீதுமே முக்கியமாக தாக்குதல்கள் நடத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொளுத்தப்பட்ட வாகனங்களில் அநேகம் பொலிசாரின் வாகனங்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றன.

### பொலிசாரின் சூட்டிற்கு ஒருவர் பலியானார்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களால் நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு அமைச்சர் ஒருவரின் வீடே முதலில் உட்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது இத்தாக்குதலின்போது பொலிசார்நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தீயணைப்பு படைவாகனம் தீமூட்டி எரிப்பு

[கொழும்பு]

லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் நடாத்திய வன்முறையில் தீயணைக்கும் படை வாகனம் உட்பட குறைந்தது ஆறு வாகனங்கள் தீக்கிரையாகியதாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

பௌத்தலோக மாவத்தையில் ஒரு தீயணைக்கும் படைவாகனமும் இரண்டு பொலிஸ் ஜீப்களும் தீமூட்டி எரிக்கப்பட்டன.

### பூதவுடல் கொண்டுவந்ததும் பொலிசார் நழுவினர்

லலித் அத்துலத் முதலியின் பூதவுடல் வீட்டில் இருந்து

பி. பி ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

### ராஜாங்க அமைச்சரின்

## லலித்தின் அஞ்சலி நிகழ்வில் லட்சக் கணக்கில் மக்கள்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணியின் தலைவர் திரு.லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தில் லட்சக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

லலித்தின் பூதவுடல் கொழும்பு கொள்ளுப்பிட்டி தர்மலோகமாவத்தையிலுள்ள இன்ன பிளவர்வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

நேற்று நண்பகல் 2.30 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் அன்னாரின் பூதவுடல்வைக்கப்பட்டு கொழும்பு மெல்வீதி, ராஜகீய மாவத்த வழியாக றோயல் கல்லூரியை வந்தடைந்தது. அங்கு வைத்து மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சட்டத்தரணிகள் பூதவுடலைப் பொறுப்பேற்று காவியவாறு நீட் மாவத்த, சுதந்திர மாவத்த. மீட்டன் சந்திர வண்ண வீதி மற்றும் பௌத்தலோக மாவத்த ஊடாக கனத்தை மயானத்தை வந்தடைந்தனர்.

லலித்தின் இறுதி ஊர்வலத்தில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வரை கலந்துகொண்டதாகவும், சுமார் ஒன்றரை லட்சம் மக்கள்வரை வீதிகளின் இருமருங்கிலும் நின்று லலித்திற்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தியதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வீதிகள்தோறும் அஞ்சலி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததுடன் கறுப்பு வெள்ளைக்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. இவ்வூர்வலத்தில் பெருமளவு பௌத்தபிக்குகள் முன்னணியில் கலந்துகொண்டனர்.

நேற்றுமாலை 6.மணியளவில் லலித்தின் உடல் கனத்தையில் தகனம்செய்யப்பட்டது.

### லலித்துக்கு அஞ்சலி செலுத்த அனுமதி கோரவில்லையாம்

ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

மறைந்த லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கும் லலித்தின் உறவினர்கள் அனுமதியளிக்கவில்லை என ஏ. எப். பி செய்திகளை மேற்கோள்காட்டி வெளியான

### கடைகள், தொழிற்சாலைகள் மூடப்பட்டுக்கிடந்தன

அடைந்ததாகவும் மேலும் தெரியவருகின்றது.

நேற்று பிற்பகல் லலித்தின் இறுதி ஊர்வலம் ஆரம்பமானபோது ஆரம்பத்தில் அமைதியாக இடம்பெற்றதாகவும் பின்னரே கலவரம் மூண்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கலவரத்தின்போது தீவைப்புச் சம்பவங்களும், கல்வீச்சு சம்பவங்களும் இடம்பெற்றதாகவும், இதன்காரணமாக பலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்தோடு அரசிற்கு எதிரான பலத்த கோஷங்கள் எழுப்பப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலகத்தில் ஈடுபட்டவர்கள் ஐக்கியதேசியக் கட்சியின்மீதும் பொலிசார் மீதுமே முக்கியமாக தாக்குதல்கள் நடத்தியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொளுத்தப்பட்ட வாகனங்களில் அநேகம் பொலிசாரின் வாகனங்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றன.

## பொலிசாரின் சூட்டிற்கு ஒருவர் பலியானார்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களால் நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு அமைச்சர் ஒருவரின் வீடே முதலில் உட்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது இத்தாக்குதலின்போது பொலிசார்நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜாங்க அமைச்சரின் அலுவலகத்திற்கு கல்வீச்சு

(கொழும்பு)

கொழும்பு சுதந்திர சதுக்கத்திற்கு அண்மையிலுள்ள இராஜாங்க அமைச்சரின் அலுவலகமொன்று நேற்று லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தவர்களின் கல்வீச்சுக்கு இலக்காகியது.

இதனையடுத்து அங்கு காவலுக்கு நின்ற பொலிசார் சுட்டதில் இருவர் காயமடைந்தனர். இதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாயுள்ளது. மேலும் கல்வீச்சினால் காயமடைந்த 10 பேர் அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## ரூபவாகினியை தாக்க ஆர்ப்பாட்டக்காரர் முயற்சி

(கொழும்பு)

கொழும்பில் நேற்று ரூபவாகினிகூட்டுத்தாபனம் மீதும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மீதும் தாக்குதல் நடாத்தவெனபெருமளவுஆர்ப்பாட்டக்காரர் கூடினர். இவர்கள் கட்டடங்களை நோக்கி சென்றபோது அங்கிருந்த கடற்படையினர் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டக்காரரைக் கலைத்தனர்.

## விகாரை, பொலிஸ்காவலரண் மக்களால் தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்களால் விகாரை ஒன்றும் பொலிஸ் காவலரண் ஒன்றும் தாக்கப்பட்டுப் பலத்த சேதத்திற்கு உள்ளாகியது என தெரிவிக்கப்படுகிறது.

இவ் விகாரை பிரேமதாசாவிற்கு ஆதரவானது எனச் சொல்லப்படுகின்றது.

## கொழும்பில் 8மணி நேர ஊரடங்கு அமுல்

### வன்செயலையடுத்து நடவடிக்கை

லலித் அத்துலத்முதலியின் இறுதிச் சடங்கின்போது ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களை அடுத்து கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்றிரவு 8 மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

நேற்று மாலை லலித்தின் இறுதிச் சடங்கின்போது பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றதென்றும் இரவு 7-15 மணியளவில் இவ் வன்முறைகள் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ் ஊரடங்குச்சட்டம் 8 மணித்தியாலங்கள் அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

## தீயணைப்பு படைவாகனம் தீமூட்டி எரிப்பு

[கொழும்பு]

லலித் அத்துலத் முதலியின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் நடாத்திய வன்முறையில் தீயணைக்கும் படை வாகனம் உட்பட குறைந்தது ஆறு வாகனங்கள் தீக்கிரையாகியதாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

பௌத்தலோக மாவத்தையில் ஒரு தீயணைக்கும் படை வாகனமும் இரண்டு பொலிஸ் ஜீப்களும் தீமூட்டி எரிக்கப்பட்டன.

## பூதவுடல் கொண்டுவந்ததும் பொலிசார் நழுவினர்

லலித் அத்துலத் முதலியின் பூதவுடல் வீட்டில் இருந்து வெளியே கொண்டுவரும்போது வாகனங்களை நிறுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிசார் அவ்விடத்தை விட்டு நழுவி விட்டனர் என்று பி. பி ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இதே போன்ற பொலிசாரின் அசமந்த போக்கினாலேயே லலித் அத்துலத் முதலி சுடப்பட்டார் என அச் செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

## கனத்தை மயான பகுதிக்கு இராணுவப் பாதுகாப்பு

பொரளை கனத்தை மயானம் ஒரு யுத்த களமாக நேற்று காணப்பட்டது கனத்தை மயானத்துக்கும், அதனைச் சூழவுள்ளபகுதிகளுக்கும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இப்பகுதிக்கான பாதுகாப்பை பொலிசார் வழங்க அனுமதி வழங்கப்படவில்லை.

லலித் அத்துலத் முதலிக்கு இறுதி அஞ்சலி செலுத்த முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, தற்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வரவில்லை.

இலங்கை வரலாற்றில் ஒரு கட்சித் தலைவருக்கு அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இறுதி அஞ்சலி செலுத்த முடியாமல் போன முதல் சம்பவம் இது என்பது குறிப்பிடத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்றைய வன்முறைக்கு அரசாங்கமே பொறுப்பு

(கொழும்பு)

கொழும்பில் நேற்று நடைபெற்ற வன்முறைகளை அரசாங்கமே திட்டமிட்டு செயல்படுத்தியது. வன்முறைகளை ஏற்படுத்துவதன்மூலம் மே மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைக்க அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டத்தின் முதல் கட்டமே இது என எதிர்க் கட்சிகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்

[4ஆம் பக்கம் பார்க்க]

## மழை பெய்ததினாலேயே வன்முறை தணிந்தது

[கொழும்பு]

லலித்தின் இறுதிச்சடங்கின் போது வெடித்த வன்முறை மேலும் பரவுவதை கொழும்பில்நேற்றிரவுபெய்த மழையே தடுத்ததாக் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக பெருந்தொகையான மக்கள் பொலிசாருடன் மோதினர். கனத்தை மயானத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் போர் வலயம் ஒன்றுபோல் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மழைபெய்தமை வன்முறைகள் மேலும் இடம் பெறுவதைத் தடுத்தது.

**வெள்ளி மஞ்சரியில்......**
**லலித்தின் இறுதிநிமிடங்கள்**

கான மக்கள் கலந்துகொண்டு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

லலித்தின் பூதவுடல் கொழும்பு கொள்ளுப்பிட்டி தர்மலோகமாவத்தையிலுள்ள இன்ன பிளவர்வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

நேற்று நண்பகல் 2.30 மணியளவில் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் அன்னாரின் பூதவுடல்வைக்கப்பட்டு கொழும்பு மெல்வீதி, ராஜகீய மாவத்த வழியாக றோயல் கல்லூரியை வந்தடைந்தது. அங்கு வைத்துடன் சந்திர வண்ண வீதி மற்றும் பௌத்தலோக மாவத்த ஊடாக கனத்தை மயானத்தை வந்தடைந்தனர்.

லலித்தின் இறுதி ஊர்வலத்தில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வரை கலந்து கொண்டதாகவும், சுமார் ஒன்றரை லட்சம் மக்கள்வரை வீதிகளின் இருமருங்கிலும் நின்று லலித்திற்கு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்ததுடன் கறுப்பு வெள்ளைக்கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. இவ்வூர்வலத்தில் பெருமளவு பௌத்தபிக்குகள் முன்னணியில் கலந்து கொண்டனர்.

நேற்றுமாலை 6மணியளவில் லலித்தின் உடல் கனத்தையில் தகனம்செய்யப்பட்டது.

## லலித்துக்கு அஞ்சலி செலுத்த அனுமதி கோரவில்லையாம்

### ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

மறைந்த லலித் அத்துலத் முதலியின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கும் லலித்தின் உறவினர்கள் அனுமதியளிக்கவில்லை என ஏ. எப். பி செய்திகளை மேற்கோள்காட்டி வெளியான செய்திகள் தவறானவை என ஜனாதிபதி செயலகம் நேற்று அறிவித்தது.

ஜனாதிபதியோ, முன்னாள் ஜனாதிபதியோ இப்படியான எந்தக் கோரிக்கையையும் விடுக்கவில்லை. லலித்தின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த ஏற்கனவே அவரின் வாசஸ்தலத்திற்கு சென்ற பௌத்தபிக்குகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் வன்முறைக்கு உள்ளானதால் இந்த விதமான வேண்டுகோள் விடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை. எனவே ஏ. எப். பியின் இந்த செய்தி முற்றிலும் தவறானது

[4ஆம் பக்கம் பார்க்க]

## கடைகள், தொழிற்சாலைகள் மூடப்பட்டுக்கிடந்தன

ஜனநாயக ஐக்கிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலியின் இறுதிச்சடங்கை முன்னிட்டு நேற்று கொழும்பில் கடைகள், தொழில் நிறுவனங்கள் என்பன மூடப்பட்டிருந்தன. இறுதி ஊர்வலம் நடைபெற்ற பகுதியைத் தவிர்ந்த ஏனைய பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. வாகனப் போக்குவரத்துகள் குறைவாக காணப்பட்டதாகவும், பஸ்களும் பெருமளவில் ஓடவில்லை எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஐ. தே. க. செயற்குழு சிறில்ரணதுங்கவுடன் பேச்சு

[கொழும்பு]

மாகாணசபைத் தேர்தல்களை ஒழுங்காக நடத்துவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயற்குழு பாதுகாப்பு அமைச்சு செயலாளருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சிறில் ரணதுங்கவுடன் நடத்தப்பட்ட இப்பேச்சுக்களில் சிறிசேன குரே, ரணில் விக்கிரமசிங்க, கே என். சொக்ஸி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கூட்டங்களுக்கு பாதுகாப்பு பிராந்திய டி. ஐ. ஜி. பொறுப்பு

கட்சிகளின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு பொலிஸ். பாதுகாப்பு வழங்கப்படுவதில் கட்சிப் பாகுபாடு காட்டப்படக்கூடாது என்று பொலிஸ் மா அதிபர் சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளையும் கேட்டுக்கொண்டுள்ளார். பாதுகாப்பு வழங்கத் தவறினால் அதற்கான பொறுப்பை அப் பிராந்திய டி. ஐ. ஜி. உட்பட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வரை அனைவரும் ஏற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைக் கூட்டத்திற்கான அனுமதி வழங்கப்படும்போதே பாதுகாப்பிற்கான ஏற்பாடும் செய்யப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### பூநகரிப்பாதை விவகாரம்

## போக்குவரத்தைக் கவனிக்க ஐ. நா. அதிகாரபூர்வ முடிவு

அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தாங்கிவரும் வாகனங்களைச் சங்குப்பிட்டி- சேரதீவு பாதையூடாகக் கண்காணிக்கும்பணியைப் பொறுப்பேற்பதற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் அதிகாரபூர்வமாக இணக்கம் தெரிவித்திருக்கிறது. ஜெனீவாவிலுள்ள தூதரகத் தலைமையகம் இந்த முடிவை எடுத்திருப்பதாக யாழ்ப்பாணத்திலுள்ளயு.என். எச். சி. ஆர். பிரதிநிதி திரு. அசோக்குமார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐ. நா. தூதரக உயர் அதிகாரி டாக்டர் நீக்கலஸ் இப்பாதை திறப்பது சம்பந்தமாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு வெகுவிரைவில் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகவும், கொள்கையளவில் இது குறித்து விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் மத்தியில் ஏற்கனவே இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் திரு. அசோக்குமார் தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

### றேடியோ. கசற்றேடியோ கடிகாரங்களா?

சகல மணிக்கூடு வகைகள், எலெக்ரோனிக் கடிகாரங்கள். றேடியோக்கள், கசெற் றேடியோக்கள் யாவற்றையும் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள, டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில் கூல்பார் அருகில்) கிளை; சாவகச்சேரி (இலங்கை வங்கி அருகில்) சகல மணிக்கூட்டு பற்றறிகளும் எம்மிடம்உண்டு. (சி-6508)

### காணவில்லை

164 கோவில் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை சிவநாதன் என்பவருடைய அடையாளஅட்டை (அனுராதபுரா விலாசமுடையது' புகையிரத பகுதி அடையாள அட்டை என்பவற்றைக் காணவில்லை கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். மிகவும் அவசரம். (4782)

### கசற்றேடியோக்களா! கடிகாரமா!!

உங்கள் கடிகாரங்களையும் றேடியோக்களையும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6525)

### தேவை

5KV இற்கும் 10KV இற்கும் இடையே வலு உடையதும் டீசலில் இயங்கக் கூடியதுமான ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: நளினி கிறைண்டிங் மில் 730, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (4786)


## எழுச்சி வாரப் போட்டிகள்

மேதினத்தை முன்னிட்டு தமிழீழப் பொருண்மிய மேம்பாட டுக்கழகத்தால் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகள் முல்லைத்தீவின் பல பகுதிகளிலும் நடாத்தப்பட்டுவருகின்

## நகை திருடியவர் காவல்துறையால் கைது

(தென்மராட்சி)

வீட்டில் இருந்த 2 பவுண் தங்கநகையையும் பணத்தையும்திருடிய நபர்ஒருவர்சென்ற கிழமை சாவகச்சேரி தமிழீழ காவல்துறையினரிடம் அகப்பட்டார்.

இச்சம்பவம் பற்றிகூறப்படுவதாவது;சாவகச்சேரி பிரதான வீதியில் வசிக்கும் நாகலிங்கம் செல்லத்துரை (ஆசிரியர்) என்பவர் வீட்டில் சென்ற கிழமை பகலில் வீட்டார் கதவைப் பூட்டி விட்டு கதவில் திறப்பினை வீட்டுச் சென்ற போது நபரொருவர் கதவினைத் திறந்து நகையையும். பணம் நானூறு ரூபாவையும் அபகரித்துச் சென்றுள்ளார். பின்பு காவல்துறையினரின் முயற்சியால் அந்நபர் பிடிபட்டுள்ளார். (86)

## மஹா கும்பாபிஷேகம்

பருத்தித்துறை புலோலி மேற்கு அருள்மிகு ஆலடிப் பிள்ளையார் நவகுண்டபடி மகாகும்பாபிஷேகம் எதிர் வரும் திங்கட்கிழமை ''வேதாகம சோதிட பூஷணம்'' ''சிவாசார்ய திலகம்'' சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறும். இதற்கான பூர்வாங்கக் கிரியைகள் இன்றுவிய ழக்கிழமை ஆரம்பமாகின்றன.


## முதலாம் அரையாண்டு விஞ்ஞான பீடப் பரீட்சை 1992

மேற்படி முதலாம், இரண்டாம், மூன்றாம் ஆண்டுகளுக்குரிய பரீட்சைகள், கீழ்த்தரப்பட்டுள்ள திகதிகளில் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| முதலாம் ஆண்டு பரீட்சை | — | 13-05-1993 |
| இரண்டாம்ஆண்டு பரீட்சை | | 30-04-1993 |
| மூன்றாம் ஆண்டு பரீட்சை | — | 07-05-1993 |

-பதிவாளர்

(சி-6515)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட, யாழ்.

95 பிரிவு - 2

கலை, வர்த்தக வகுப்புக்கள்

புதிய பிரிவு: 02. 05. 93

காலை 9. 00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. S K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் ) இந்து சமயம் ) | — | திரு. காரைசுந்தரம்பிள்ளை |


1993ஆம் ஆண்டு வதிவிட வேளாண்மைப் போட்டியில்

## வெற்றியீட்டியோர் விபரம்

### 1. மாவட்டமட்டம்

1ஆம் இடம்:குமாரசாமிகிருஸ்ணானந்தன் அல்லாரை வடக்கு, மீசாலை, சாவகச்சேரி
2 ஆம் இடம்: இளம்சிங்கம் செல்வக்குமரன் செம்பியன் பற்று தெற்கு, மருதங்கேணி,
3 ஆம் இடம்: கெங்காதரன் சந்திரசேகரம் பேக்கரி ஒழுங்கை, சண்டிலிப்பாய் மேற்கு,

### 2. கோட்டமட்டம்

அ) வலிகாமக்கோட்டம்
1 ஆம் இடம்; பொன்னம்பலம் லோகநாதன் பொற்பதி வீதி, கொக்குவில்
2 ஆம் இடம்; விநாயகமூர்த்தி சகாதேவன் இராச வீதி, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
3 ஆம் இடம்: சுப்பிரமணியம் கந்தசாமி கோப்பாய் வடக்கு.
ஆ) வடமராட்சிக் கோட்டம்
1 ஆம் இடம்: சுமதி விஸ்வலிங்கம் பாரதி வீதி, கம்பர்மலை, உடுப்பிட்டி.
2 ஆம் இடம்: செல்லமுத்து ரகுநாதன் போதர மடம், துன்னாலை வடக்கு.
3 ஆம் இடம்: வாசுகி விசுவலிங்கம் முக்காரவத்தை, கெருடாவில் வடக்கு.
இ) தென்மராட்சிக் கோட்டம்
1 ஆம் இடம்: செல்லையா கணபதிப்பிள்ளை அல்லாரை வடக்கு, மீசாலை, சாவகச்சேரி.
2 ஆம் இடம்: ராசதுரை சுகுமார் மீசாலை, சாவகச்சேரி.
3 ஆம் இடம்: சுப்பிரமணியம் கருணாகரன், முகமாலை, பளை.

### 3. வட்ட மட்டம்

(உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டம்)

நல்லூர் மட்டம்
1 ஆம் இடம்:நாராயணசுவாமி சிறிவிவேகானந்தன் 348, ஆனந்தன் வடலி வீதி. அரியாலை
2 ஆம் இடம்: செல்வரட்ணம் லிங்கேஸ்வரன் பணிக்கர்வளவு திருநெல்வேலி
3 ஆம் இடம்; சின்னையா செல்வரட்ணம் கோமுகி, 3ம் கட்டை, கண்டி வீதி, அரியாலை.

#### ஆறுதல் பரிசு

1) திரு தம்பிப்பிள்ளை தனபாலசிங்கம் 10, சின்னாலம் ஒழுங்கை, அரியாலை.
2. திரு. குமாரசிங்கம் நித்தியானந்தன்— 9, முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை.
3. தயானுஷாவரதராஜன்- இராஜசக்தி, வண்ணார் பண்ணை.
4. பேரம்பலம்மெய்யழகன்- சுதானந்தன், கொக்குவில்.
5. கதிரவேலு சூரியகுமாரன் - செங்குந்தா வீதி,

-புத்தூர் கிழக்கு.
9. ஆறுமுகம் விமலாதேவி- மந்திரிமலை, புத்தூர் வடக்கு.
10. மாணிக்கம் இரத்தினமலர் - திருவண்ணாமலை, கரந்தன் வீதி, நீர்வேலி மேற்கு.

#### உடுவில் வட்டம்

1ஆம் இடம் - திரு. தம்பிப்பிள்ளை ராமநாதன் - புஸ்பநாதன்வீதி, இணுவில்மேற்கு.
2ஆம் இடம் - தம்பிரத்தினம் மல்லிகாதேவி - முருகேசு பண்டிதர் வீதி சுன்னாகம் மேற்கு.
3 ஆம் இடம் - வை. வினாசித்தம்பி - சிறிரங்கம் தேவாலய வீதி, கொக்குவில், தாவடி தெற்கு.

#### ஆறுதல் பரிசு

1. மயில்வாகனம் சர்வேஸ்வரன் - யோகவாசம், இணுவில் கிழக்கு.
2. இராசரத்தினம் வசந்தரூபன் - பிள்ளையார் கோவிலடி, இணுவில் கிழக்கு.
3. தம்பு குமாரசாமி - அம்மன் வீதி, உடுவில் வடக்கு.
4. சண்முகநாதன் பிரகதீஸ்வரன் - வங்கியடி இணுவில் கிழக்கு.
5. சர்வானந்தன் சபேசன் - சிரஞ்சீவி வீதி, சுன்னாகம் தெற்கு.
6. செல்லத்துரை பத்மாவதி - ஞானசம்பந்தர் இல்ல ஒழுங்கை, இணுவில் வடகிழக்கு.
7. பொன்னுத்துரை மனோகுமார் - இலங்கை வங்கி வீதி, சுன்னாகம்தெற்கு,
8. கந்தவனம் பாலகிருஸ்ணன் - ஏழாலை கிழக்கு
9. சின்னப்பொடி நடராஜா - கந்தரோடை மேற்கு.
10. ராகினி சிறிஸ்கந்தராஜா- உடுவில் தெற்கு.

#### சண்டிலிப்பாய் வட்டம்

1 ஆம் இடம் - பொன்னம்பலம் புஸ்பராணி - ஈஞ்சடி சுதுமலை வடக்கு.
2 ஆம் இடம் - கிருஸ்ணபிள்ளை இராசலிங்கம் - கட்டுடை மானிப்பாய்.
3 ஆம் இடம் - சிவதரணி பசுபதிப்பிள்ளை - பொன்னாலை வீதி, மானிப்பாய் வடக்கு.

#### ஆறுதல் பரிசு

1. எட்லின் றோஸ்மேரி- வடலித்தோட்டம், மானிப்பாய், வட கிழக்கு.
2. கணபதிப்பிள்ளை மகேந்திரன்-துவாரகை கூழாவடி, ஆனைக்கோட்டை.
3. சதாலட்சுமி ராசமோ

## பாடசாலை ஆசிரியருக்கான போக்குவரத்து சேவை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் வெளியிடத்தினைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு குறைந்த கட்டணத்தில் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

பருத்தித்துறைக்கும் உடுத்துறைக்குமிடையிலேயே, பிரதி திங்கள் வெள்ளி ஆகிய தினங்களில் நடத்தப்படவுள்ளன.

இச்சேவை அண்மையில் நாகர்கோவிலில் வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஒழுங்கு செய்து நடத்தப்பட்ட கல்விக் கருத்தரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய, வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரின் அனுசரணையுடன் நாளை வெள்ளிக்கிழமை மருதங்கேணியிலிருந்து ஆரம்பித்துவைக்கப்படவுள்ளன

பருத்தித்துறையிலிருந்து நாகர்கோவில் வரையுள்ள இடங்களுக்கு ஒருவழிக்கட்டணமாக 10 ரூபாவும் குடாரப்பு தொடக்கம் உடுத்துறை வரையுள்ள இடங்களுக்கு ஒருவழிக்கட்டணமாக 20 ரூபாவும் அறவிடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது

திங்கட்கிழமைகளில் பருத்தித்துறையிலிருந்து காலை 7 மணிக்கும், வெள்ளிக்கிழமைகளில் பி.ப 2 45 மணிக்கு உடுத்துறையிலிருந்தும் இச்சேவை ஆரம்பமாகும். (36)

## மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்

யாழ். கரபந்தாட்ட சமாசம், சர்வதேச விதிகளுக்கு அமைய, கடந்த மாதம் மத்தியஸ்தர்களை தெரிவுசெய்யு முகமாக எழுத்து மூலம் நடாத்திய போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன.

யாழ். மாவட்டத்தில் முதன் முதலாக நடைபெற்ற இப் பரீட்சையில் திருவாளர்கள் கே. மனோகரன் எஸ். இரத்தினகுமார், ஏ. சதீசன், வி. லோகதாஸ், கே. ராஜாராம், கே. நாகேந்திரம், சரா. புவனேஸ்வரன், எம். உருத்திரன், இ செல்வராசா, கே சுயந்தன் ஆகியோர் 80 புள்ளிகளுக்கு மேலாக பெற்று விசேட சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் திருவாளர்கள் ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளை, எம்.ஜோண்சன், ரீ றொபேட், எஸ். பகிரதன், ரீ. பிரேமச்சந்திரன், என். சுதாகரன், ஏ. ஜெயகாந்தன், ரீ. கருணாகரன் இ. யசீதரன், ரீ.வாகீஸ்வரன், தொ. குருள் ஆகியோர் 60 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்குரிய சான்றிதழ்கள். வெகுவிரைவில் யாழ். கரபந்தாட்ட சமாசத்தினால் நடத்தப்படவுள்ள வீரர், வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம் இறுதிநாள் நிகழ்ச்சியின் போது வைபவ ரீதியாக வழங்கப்படவுள்ளதாக, யாழ். கரபந்தாட்ட சமாசத் தலைவர் கப்ரின் டீ. ஏ. எம். குணசிங்கம் தெரிவித்தார்.

## மருத்துவமனை ஊழியர் விசர்நாய் கடியால் காயம்

மந்திகை அரசினர் மருத்துவமனை வளவினுள் நடமாடித் திரிந்த விசர்நாய் ஒன்று அங்கு பணிபுரியும், இரண்டு பெண் தாதிய உத்தியோகத்தர்களையும், மனநோயாளிப் பெண்ணையும். ஒரு சிறுமியையும் கடித்துத் துன்புறுத்தியது.

இது சம்பந்தமாக, ஆஸ்பத்திரி நிர்வாகம் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் மூலம், விசர்நாய் அடித்துக் கொல்லப்பட்டது.

விசர்நாய்க் கடிக்கு இலக்கான நால்வரும் தடுப்பு ஊசி ஏற்றிய நிலையில் உள்ளனர். (30)

## மேதின ஊர்வலத்தில் பங்கேற்க அழைப்பு

மேதின ஊர்வலத்தில் பங்கு கொள்ளும் முகமாக வடமராட்சி தென்மராட்சி கோட்டங்களைச் சேர்ந்த சுருட்டுத் தொழிலாளர்கள் அவ்வக் கோட்டங்களுடன் இணைந்து கொள்ளும்படியும், வலிகாமம். நல்லூர் மற்றும் யாழ். மாவட்டப் பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தத்தம் குடும்பங்களுடன் சுருட்டுத் தொழிலாளர் சங்கப் பணிமனையில் முற்பகல் 12-00 மணிக்கு முன்பாக கூடும்படியும் வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் கோரியுள்ளது.

## தேவை

5KV இற்கும் 10KV இற்கும் இடையே வலு உடையதும் டீசலில் இயங்கக் கூடியதுமான ஜெனரேற்றர் தேவை. தொடர்பு: நளினி கிறைண்டிங் மில் 730, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (4786)

## எழுச்சி வாரப் போட்டிகள்

மேதினத்தை முன்னிட்டு தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தால் உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகள் முல்லைத்தீவின் பல பகுதிகளிலும் நடாத்தப்பட்டுவருகின்றன. போட்டிகள் தற்போது ஒட்டிசுட்டான், முல்லை, நெடுங்கேணி புதுக்குடியிருப்பு ஆகிய வட்டங்களிலும் மணலாறு கோட்டத்திலும் நடாத்தப்ப கின்றன.

மாவட்ட மட்டப்போட்டி ஒட்டிசுட்டானில் 30-ம் திகதி நடைபெறும்.

### வீரவணக்கக் கூட்டம்

(வடமராட்சி)

கரவெட்டி வட்டத்தில் இதுவரை காலமும் சித்திரை மாதத்தில் வீரச்சாவெய்திய 7 மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று வியாழக்கிழமை இரவு 7-30 மணிக்கு துன்னாலை சிற்றூர் பொறுப்பாளர் திரு. கரிகாலன் தலைமையில் துன்னாலை கலிகைக் கந்தன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

2ஆம் லெப். பட்டாபி, சங்கர், சிவா, 2ஆம் லெப். முரளி, பட்சம், பொஸ்கோ, லெப். வாசு ஆகிய மாவீரர்கள் அன்றைய தினம் நினைவு கூரப் படுவர். (யோ)

* *

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் பிரதேசத்தில் மூன்றாம் நான்காம் மாதங்களில் வீரச்சாவினைத் தழுவிக் கொண்ட பதினொரு மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணிக்கு மாமுனை பாடசாலைக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது

வடமராட்சி கிழக்கு கடற்புலிகள் வட்டப் பொறுப்பாளர் திரு. சீர்மாறன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு நினைவுரையாற்றுவார்கள். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (36)

---

## நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட, யாழ்.

**95 பிரிவு - 2**

கலை, வர்த்தக வகுப்புக்கள்

**புதிய பிரிவு: 02. 05. 93**

காலை 9. 00 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| கணக்கியல் | — | திரு. S K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் ) இந்து சமயம் ) | — | திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | திரு குணராஜா |
| அரசியல் | — | திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — | திரு. சிறீதரன் |

95ஆம் ஆண்டுக்கு III பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(சி-6519)

---

## 41-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
1950 – 05 – 12



அரக்கர் அழிப்பு:
1983 – 03 – 20

## செல்லத்துரை சாந்தலிங்கம்

(வேலணை—துறையூர்)

வாழ்வின் வழிகாட்டியே! எம்மை
வாழவைத்த ஆருயிர்த் தெய்வமே!
அணையாத தீம் என்றிருந்தோம்
வேதனையில் எம்மைத் தவிக்க விட்டு
விண்ணுலகம் சென்று விட்டீர்
விண்ணுலகம் சென்றாலும்—எங்கள்
எண்ணமதில் என்றும் நிலைத்திருப்பீர்கள்
கடலில் மறைந்திட்டாலும் எங்கள்
கண்களில் என்றும் நடமாடுகிறீர்கள்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
எங்கள் ஈசனை வேண்டுகிறோம்.

பண்டிதர் குடியிருப்பு,
கெற்பெலி,
கிளாலி.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

(சி-6516)

---

2 ஆம் இடம்: செல்வரட்ணம் லிங்கேஸ்வரன் பணிக்கர்வளவு திருநெல்வேலி
3 ஆம் இடம்; சின்னையா செல்வரட்ணம் கோமுகி, 3ம் கட்டை, கண்டி வீதி, அரியாலை.

### ஆறுதல் பரிசு

1) திரு தம்பிப்பிள்ளை தனபாலசிங்கம் 10, சின்னாலம் ஒழுங்கை, அரியாலை.
2. திரு. குமாரசிங்கம் நித்தியானந்தன்— 9, முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை.
3. தயானுஷா வரதராஜன்- இராஜசக்தி, வண்ணார் பண்ணை.
4. பேரம்பலம்மெய்யழகன்- சுதானந்தன், கொக்குவில்.
5. கதிரவேலு சூரியகுமாரன் - செங்குந்தா வீதி, திருநெல்வேலி.
6. மகேந்திரராசா பிரகலாதன்-32, பிரப்பன்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை.
7. திரு. நன்னி அருளானந்தம் 6 2/2சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
8. திரு. மார்க்கண்டு திருநாவுக்கரசு-164/10 கச்சேரி, நல்லூர் வீதி, அரியாலை.
9. திரு. கனகசபை பற்குணநாதன்-164/9 கச்சேரி, நல்லூர் வீதி, அரியாலை.
10. திரு. மகாதேவா சுதாகரன்—197/199 கோவில் வீதி, நல்லூர்.

### வட்ட மட்டம்

### கோப்பாய் வட்டம்

1ஆம் இடம் - நடராஜா திருஞானசம்பந்தர் - நீர்வேலி வடக்கு.
2ஆம் இடம் தங்கேஸ்வரி கந்தையா-ஆவரங்கால் மேற்கு.
3ஆம் இடம்- சிவகௌரி தனபாலன்-சிறுப்பிட்டி கிழக்கு.

### ஆறுதல் பரிசு

1. முருகேசு புஸ்பதேவி- வசிட்டன் வீதி, புத்தூர் கிழக்கு.
2. வெள்ளையன் ஞானாம்பிகை - இளமாலை ஆவரங்கால் மேற்கு.
3. வித்தியானந்தன் கேதீஸ்குமார்- சிவன்கோவிலடி, புத்தூர் மேற்கு.
4. முருகன் பரமன்- புத்தூர் மேற்கு.
5. ஜெயந்தி பொன்னுத்துரை-றெக்சி வீதி, ஆவரங்கால் மேற்கு.
6. நடராஜா சிவசுப்பிரமணியம்-மதுரையங்கிரி, நீர்வேலி மத்தி.
7. தாமோதரன் சசிதரன் - இந்துக் கல்லூரியடி, உரும்பராய் வடக்கு.
8. ரஞ்சனி மாயகேஸ்வரன் ராஜா- உடுவில் தெற்கு.

### சண்டிலிப்பாய் வட்டம்

1 ஆம் இடம் - பொன்னம்பலம் புஸ்பராணி - ஈஞ்சடி சுதுமலை வடக்கு.
2 ஆம் இடம் - கிருஸ்ணபிள்ளை இராசலிங்கம் - கட்டுடை மானிப்பாய்.
3 ஆம் இடம் - சிவதரணி பசுபதிப்பிள்ளை - பொன்னாலை வீதி, மானிப்பாய் வடக்கு.

### ஆறுதல் பரிசு

1. எட்லின் றோஸ்மேரி- வடலித்தோட்டம், மானிப்பாய், வடகிழக்கு.
2. கணபதிப்பிள்ளை மகேந்திரன்-துவாரகை கூழாவடி, ஆனைக்கோட்டை.
3. சதாலட்சுமி ராசமோசன்-சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.
4. கணேசு கமலதாசன்- கனகசபை வீதி, மானிப்பாய் தெற்கு.
5. குணசிங்கம் செல்வலட்சுமி-உடுவில் றோட், மானிப்பாய் வடகிழக்கு.
6 சிவலிங்கம் நாகநந்தினி- உடுவில் வீதி. மானிப்பாய் வடக்கு
7. அரியரத்தினம் யோகரத்தினம்-அரசடிப் பிள்ளையார் வீதி, மானிப் பாய் மேற்கு.
8. செல்லையா திருநாவுக்கரசு- சீரணி நாகம்மாள் வீதி, சண்டிலிப்பாய் மேற்கு.
9. சின்னையா குணரத்தினம்-சுதுமலை வடக்கு.
10. மாணிக்கம் பூபதி-செந்தூரன் வீதி, மானிப்பாய் வடக்கு.

---

## மேதின ஏற்பாடு தீவிரம்

[தொல்புரம்]

எதிர்வரும் தொழிலாளர் நாளாகிய மேதினத்தை முன்னிட்டு அந்நாளைச் சிறப்பாகக் கொண்டாட சங்கானை வட்ட பிரதேசமெங்கிலும் உள்ள முக்கிய சந்திகள், பிரதான வீதிகள், கூட்டுறவாளர் சங்கங்கள் ஆகியவற்றில் தொழிலாளர் தினத்தையொட்டிய வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

இவை சங்கானை, சித்தன்கேணி வட்டுக்கோட்டை, அராலி, மூளாய், தொல்புரம், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் சிவப்பு, மஞ்சள் வர்ண எழுத்துக்கள் பொறித்த தொழிலாளரை ஒருங்கிணைக்கும் வசனங்கள் எழுதப் பெற்ற பதாகைகள் அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பு அம்சமாகத் திகழும் காட்சி குறிப்பிடத் தக்கதாகும். [41]

---

மனை வளவினுள் நடமாடித் திரிந்த விசர்நாய் ஒன்று அங்கு பணிபுரியும், இரண்டு பெண் தாதிய உத்தியோகத்தர்களையும், மனநோயாளிப் பெண்ணையும். ஒரு சிறுமியையும் கடித்துத் துன்புறுத்தியது.

திரி நிர்வாகம் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் மூலம், விசர்நாய் அடித்துக் கொல்லப் பட்டது.

விசர்நாய்க் கடிக்கு இலக்கான நால்வரும் தடுப்பு ஊசி ஏற்றிய நிலையில் உள்ளனர். (30)

## மேதின ஊர்வலத்தில் பங்கேற்க அழைப்பு

மேதின ஊர்வலத்தில் பங்கு கொள்ளும் முகமாக வடமராட்சி தென்மராட்சி கோட்டங்களைச் சேர்ந்த சுருட்டுத் தொழிலாளர்கள் அவ்வக் கோட்டங்களுடன் இணைந்து கொள்ளும்படியும், வலிகாமம். நல்லூர் மற்றும் யாழ். மாவட்டப் பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் தத்தம் குடும்பங்களுடன் சுருட்டுத் தொழிலாளர் சங்கப் பணிமனையில் முற்பகல் 12-00 மணிக்கு முன்பாக கூடும்படியும் வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் கோரியுள்ளது.

---

## நினைவு கூருகின்றோம்...
## 1993-04-29

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - வட்டுக்கோட்டைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

கப்டன் லிங்கம் (சிங்காரவேல் செல்வகுமார்- சதீஸ்குமார் வீதி, தெணியம்பை, வல்வெட்டித்துறை- யாழ்.)

1988ஆம் ஆண்டு மன்னார்- பரப்புக்கடந்தான் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

லெப். ஜீவன் ( - மதியழகன் - திருமலை)

1991ஆம் ஆண்டு மட்டு - மகிழடித்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

பரமானந்தன் (க. மனோகரன் - திருப்பழுகாமம் - மட்டு. )

மன்னார் - வஞ்சியன் குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

றோஜன் (முருகேசு கிருஷ்ணன் - எருவிட்டன், நானாட்டான் - மன்னார்)

2-ம் லெப். கோணேஸ் (பிரான்சிஸ் சிவகுமார்- புதிய வீடமைப்புத்திட்டம், மறவன்புலவு கைதடி - யாழ் )

கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். ஆனந்தன் (பத்மநாதன் கமலநாதன்-அம்மன் கோயிலடி, கோண்டாவில் - யாழ். )

1992ஆம் ஆண்டு பொலநறுவை - அழிஞ்சிப்பொத்தானைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

2-ம் லெப். யோகராசா [நடராசா புவனேந்திரன்- வாழைச்சேனை - மட்டு. ]

பொலநறுவை கிராமங்களில் முஸ்லிம் ஊர்காவல், முஸ்லிம் பொலிசார் மற்றும் முஸ்லிம் காடையர்களின் அட்டூழியங்களினால் சிறுவர்கள் பெண்கள் உட்பட 85 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டவர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6522)

Chundikuli Branch Library

### சிந்தனைக்கு

கலையைப் போலவே, ஒழுக்க நெறியிலும் ஒருவரது அனுபவத்தை மற்றவருக்கு மாற்றித் தருவது இயலாத காரியமாகும்.

– ஜேம்ஸ் ஆர்த்தனிஃபிரஷ்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## தென்னாசியாவில் ஜனநாயகம்

''பாத்திரம் அறிந்து பிச்சை போடு'' என்பது தமிழர் முதுமொழி. அதாவது பிச்சை பெறுபவர் அதற்குத் தகுதியானவரா என்று கணிப்பீடு செய்த பின்னர் பிச்சையைக் கொடு என்பதே அம்முதுமொழி வழங்கும் அறிவுரையாகும். இன்று தென்னாசிய நாடுகளின் ஜனநாயகம் குறித்தும் இவ்வாறான ஒரு கேள்வியையே எழுப்பத் தூண்டுகின்றது. அதாவது தென்னாசிய நாடுகளுக்கு ஜனநாயகம் என்பது பொருத்தப்பாடானதா என்பதே அக்கேள்வியாகும்.

தென்னாசியாவில் உள்ள பெரும்பாலான அதிலும் குறிப்பாக முன்னணி நாடுகள் யாவும் பெயரளவில் 'ஜனநாயக நாடுகள்' என்றே சொல்லப்படுகின்றன. இதில் உலக சனத்தொகையில் இரண்டாவது இடத்தை வகிக்கும் இந்தியா உட்பட பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஷ் என்பன குறிப்பிடத்தக்கவை.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் இந்தியாவில் இன்று நடைபெறுவது எந்தளவிற்கு ஜனநாயக ஆட்சி முறைக்குள் அடங்கும் என்பது கேள்விக்குரிய தொன்றே. இந்தியாவின் பல பாகங்களிலும் தமது தேசிய சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தேசிய இனங்கள் மிருகத்தனமாக அடக்கப்படுகின்றன. அங்கு அரச படைகள் புரியும் கொலைகள் கணக்கில் அடங்காதவை. இந்நிலையில் இதனை ஒரு ஜனநாயக ஆட்சி என்பதை விட பொலிஸ் ராச்சியம் என்று கூறுவதே பொருந்தும்.

மேலும் ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநில அரசுகளை மத்திய அரசு கலைப்பது சாதாரண ஒரு விடயம். மத்தியிலுள்ள சிறுபான்மை அரசுகள் மாநிலங்களில் உள்ள மக்கள் ஆதரவு பெற்ற பெரும்பான்மை அரசுகளை கலைப்பது என்பதற்கு இந்திய அரசியலே சிறப்புதாரணமாகும்.

பாகிஸ்தானைப் பொறுத்து பெயரளவில் ஜனநாயக ஆட்சி எனக் கூறிக் கொண்ட போதிலும் ஜனாதிபதியின் நிறைவேற்றும் அதிகாரங்களும், இராணுவத்தின் செல்வாக்குமே அங்கு ஆட்சியைத் தீர்மானித்து வருகின்றன. தற்பொழுது

### உலர் உணவு விநியோகம்

(குருநகர்)

யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

இதற்கென நிலையத்தால் 16 லொறிகளில் 145 மெற்றிக்தொன் உலர் உணவுப் பொருள்கள் எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டதாகநிலைய நிர்வாகச் செயலர் அருட்சகோதரிஎம்.கஷ்மீர் தெரிவித்தார். (21)

# தவறான எண்ணங்கள் திட்டமிட்டு பரப்பப்படுகிறது

### சண்டேரைம்ஸ் பத்திரிகைக்கான இறுதிப்பேட்டியில் லலித் தெரிவிப்பு

[கொழும்பு]

என்னைப் பற்றிய இரண்டு தவறான அபிப்பிராயங்கள் மக்கள் மத்தியில் வேண்டுமென்ற பரப்பப்பட்டு வருகின்றது. ஒன்று வடக்கில் விமானக் குண்டு வீச்சுகள் இடம்பெற்ற போது நான் ஒரு விமானத்தில் பறந்து கொண்டிருந்தேன் என்பது. மற்றது முஸ்லிம்களுக்கு எதிராக இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை வரவழைத்தவன் நான் என்பது என்று கொலை செய்யப்படுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் சண்டேரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கம் சரியான முறையில் நடைபெறவில்லை என்பதையும் ஏற்றுக்கொண்டார். மத்தியிலும், மாகாணத்திலும் ஒரே கட்சி தான் ஆட்சி புரிந்தமையாலும், இக்கட்சியும் இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து வருகின்றமையாலும் மாகாண சபையின் அதிகாரங்கள் தொடர்பான வரையறுப்புகள் எதுவும் செய்யப்படவில்லை. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையானது தனி ஒரு நபரிடம் ஆட்சியை ஒப்படைப்பதாகியுள்ளது. இப்போது சிறுபான்மை இனங்கள் கூட ஜனாதிபதி ஆட்சி முறைபற்றி கேள்விஎழுப்புகின்றன என்றே நினைக்கிறேன் எனவும் தெரிவித்தார்.

## அம்பாறைஅகதிமுகாம்களில் ஆஸ்மா நோய் பீடிப்பு

### வைத்திய ஆய்வு தகவல்

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 35 மாதங்களாக 12 அகதி முகாம்களில் தங்கியிருக்கும் 4224 குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்களுக்கு ஆஸ்மா நோய் பீடித்துள்ளதாக அகதிமுகாம்களை ஆய்வு செய்த அரசசார்பற்ற நிறுவனமொன்றின் வைத்திய அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

அகதி முகாம்களில் இருப்பவர்களுக்கு மூங்கில் குழாய் கம்புகளினால் குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன இந்த மூங்கில் குழாய்களை பூச்சிகள், வண்டுகள் அறுப்பதினால் இரவு நேரங்களில் அவர்கள் படுக்கும் போது தூசு அவர்களின் முகத்தில் விழுந்து பின் அவர்கள் சுவாசிக்கும்போது இத்தூசு உள்செல்கிறது. இதுவே இந்நோய்க்கு முக்கிய காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இவர்களுக்கு ஆஸ்மா நோய் மாத்திரம் அல்ல, அடிப்படை சுகாதாரம் சுத்தமான நீர் வசதிகள் இல்லாத காரணத்தால் நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி போன்ற நோய்களும் பரவி வருகிறது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது என்று பாதுகாப்புப் படையினர் தெரிவிக்கின்றனர். அப்படியாயின் எங்களை ஏன் சொந்த இடங்களுக்கு அனுப்பக்கூடாது என்று அகதிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

## வயல்களுக்குச் செல்ல விவசாயிகளுக்குத் தடை

(அக்கரைப்பற்று)

திருக்கோவில்பிரதேச வயல்களுக்குள் விவசாயிகள் செல்வதற்கு சிறிலங்காவின் விசேட அதிரடிப் படையினர் தடை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாகத் திருக்கோவில் பகுதியைச் சூழவுள்ள வயல்களில் சிறிலங்காவின் விசேட அதிரடிப்படையினர் பாரிய தேடுதல்வேட்டையில் ஈடுபட்டுள்ளதாகவும் அதனால் விவசாயிகள் எவரும் வயல்களுக்கு மறு அறிவித்தல் வரை செல்லவேண்டாம் எனவும் படையினர் அறிவித்துள்ளனராம்.

இராணுவத்தினரின் இத்தடை உத்தரவால் இப்பிரதேசத்தில் நெல் விதைப்பிற்கு ஆயத்தமாகவிருந்த பெரும் பரப்பிலான நிலங்களில் விதைப்பு மேற்கொள்ளமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும், விதைப்புக்கு ஆயத்தம் செய்யப்பட்ட முளை நெல் சேதமடைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## மகன்வீட்டிற்கு வராமையால் சிப்பாயின் தாய் தற்கொலை

(கொழும்பு)

மன்னாரில் கடமையாற்றும் இராணுவத்தைச் சேர்ந்த தமது மகன் புதுவருடத்திற்கு வீடுதிரும்பாததினால் விரக்தியுற்ற அவரின் தாய் நஞ்சுக்கிழங்கு உட்கொண்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று களுத்துறை காலமாக வீடுதிரும்பவில்லை. ஒன்றரை மாதங்களாக இவரிடமிருந்து கடிதம் ஏதும் வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மனமுடைந்திருந்த இவரின் தாயார், மகன் புதுவருடத்திற்கும் வராததினாலும் அதற்கு முதல் நாள் 21 இராணுவத்தி

### ஆடு கடித்துக் காயம்

விசர்நாயிடம் கடியுண்ட ஆடு ஒன்று வீட்டிலுள்ளவர்களைக் கடித்து பெரும் சேதத்தை உண்டாக்கியது இச் சம்பவம், அண்மையில், அல்வாய் குமுளடி என்னும் பகுதியில் இடம்பெற்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது, விசர்நாயினால் கடிக்கப்பட்ட ஆடு ஒன்று வீட்டிலுள்ள இரும்புகள், தகரங்கள் கற்கள் போன்றவற்றைக் கடித்து தின்றுவிட்டு வீட்டில் உள்ளவர்களையும் கடித்துள்ளது.

### மூக்குக்கண்ணாடி அன்பளிப்பு

வட்டு. லயன்ஸ் கழகத்தினரால் கண்பார்வை குறைந்த, மூக்குக் கண்ணாடி கொள்வனவு செய்ய வசதியற்றவர்களுக்கு மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இவ் இலவச மூக்குக்கண்ணாடிகள் வழங்கும் சேவைத் திட்டம் சுழிபுரம் வலி மேற்குப் பிரதேச சபையைச் சேர்ந்த சனசமூக நிலையங்களின் ஊடாக கண்பார்வைக் குறைபாடுடைய, மூக்குக்கண்ணாடி கொள்வனவு செய்ய வசதியற்ற வறியவர்க்கு இலவசமாக வட்டு. லயன்ஸ் கழகத்தினரால் வழங்கப்பட உள்ளதெனத் தெரியவருகிறது. (41)

பட்டதாரி ஆசிரியர்கள்

## 1000 பேருக்கு மட்டும் நிரந்தர நியமனம்

16-8-92 இல் நடாத்தப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் பரீட்சையில் நூற்றி ஐம்பது புள்ளிகளுக்கு மேல் பெற்ற சுமார் ஆயிரம் பேர் மட்டுமே தமது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு பட்டதாரிச்சம்பளம் வழங்கப்பட உள்ளார்கள் என வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மத்திய அரசாங்கத்தாலும், மாகாண அரசாங்கத்தினாலும் நியமிக்கப்பட்ட சுமார் ஐயாயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் இலங்கை பூராவும் இப் பரீட்சையை எடுத்துள்ளார்கள். இவர்களுக்கு கல்வி, விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களில் இப் பரீட்சை நடாத்தப்பட்டது. இவர்கள் இப் பரீட் ளார்கள் என வகிமா / கஅ/ க. செய/ ஆங்/ 23 இலக்க 7-4-93 கடிதப்படி சகல கோட்ட மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு எம். ஏ. சி. மொகைதீன் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இவ்வாறு புள்ளிகள் பெற்றுள்ளவர்களின் சேவையை உறுதிப்படுத்தி இரு பிரதிகளை தமக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் இக்கடிதம் மூலம் பணித்துள்ளார்.

மேலும் வெளிவந்துள்ள இப் பரீட்சை முடிவின் படி யாழ். மாவட்டத்தில் சுமார் முப்பது பேர்மட்டுமே 150க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள். இதில் நீர்வேலியைச் சேர்ந்த செல்வி

## விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 'டொனால்ட்' கணேசகுமார் ஞாபகார்த்தமாக நடத்தும் நான்காவது வருடாந்த மட்டுப்படுத்தப்பட்ட 50ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் மல்லாகம் ஆர். டி.எஸ். விளையாட்டு கழகத்தினர் சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 58ஓட்டங்களால் வெற்றியீட்டினர். மல்லாகம் அணி 9 விக்கெட் இழப்பிற்கு 205ஓட்டங்களையும் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 147ஓட்டங்களைப்பெற்றனர்.

மல்லாகம்அணியின் சார்பில் திரு.சி. விக்கினராஜா 70ஓட்டங்களைப் பெற்று இப்போட்டியில் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார். (42)

(யாழ்ப்பாணம்)

விளையாட்டு திணைக்களத்தின் ஆதரவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம், எல்லே ஆகிய போட்டிகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (42)

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம் பெற்ற 43விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில் சாவகச்சேரி ''ரெக்ரியோன் விளையாட்டுக் கழகம்' முதலாம் இடத்தைப் பெற்று வெற்றி யீட்டியுள்ளது.

இந் நிகழ்விற்கு தென்மராட்சி பிரதேசச் செயலாளர் திரு. யூ. சுந்தரம்பிள்ளை தலைமை வகித்தார் மட்டுவில் யூனியன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி பெருந்திரளான மக்கள் மத்தியில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல் பங்கு பற்றினார். (42)

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக்

தொன்றே. இந்தியாவின் பல பாகங்களிலும் தமது தேசிய சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தேசிய இனங்கள் மிருகத்தனமாக அடக்கப்படுகின்றன. அங்கு அரச படைகள் புரியும் கொலைகள் கணக்கில் அடங்காதவை. இந்நிலையில் இதனை ஒரு ஜனநாயக ஆட்சி என்பதை விட பொலிஸ் ராச்சியம் என்று கூறுவதே பொருந்தும்.

மேலும் ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநில அரசுகளை மத்திய அரசு கலைப்பது சாதாரண ஒரு விடயம். மத்தியிலுள்ள சிறுபான்மை அரசுகள் மாநிலங்களில் உள்ள மக்கள் ஆதரவு பெற்ற பெரும்பான்மை அரசுகளை கலைப்பது என்பதற்கு இந்திய அரசியலே சிறப்புதாரணமாகும்.

பாகிஸ்தானைப் பொறுத்து பெயரளவில் ஜனநாயக ஆட்சி எனக் கூறிக் கொண்ட போதிலும் ஜனாதிபதியின் நிறைவேற்றும் அதிகாரங்களும், இராணுவத்தின் செல்வாக்குமே அங்கு ஆட்சியைத் தீர்மானித்து வருகின்றன. தற்பொழுது ஜனாதிபதியாக இருக்கும் குலாம் இசாக்கான் தனது கடந்த ஐந்து வருட காலத்தில் மூன்று தடவை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களைக் கலைத்துள்ளார். இதற்கு இராணுவத்தின் ஆசீர்வாதமும் இருந்தது.

ஆனால் பாகிஸ்தான் அரசியல்வாதிகள் நடத்தும் கேவலமான அரசியல் ஜனாதிபதியின் இந்நடவடிக்கைக்குப் பெரிதும் துணைபோவதாகவுள்ளது. பெனாசீர் பூட்டோ இரு வருடங்களுக்கு முன் தனது ஆட்சியை ஜனாதிபதி கலைத்த போது அதனை ஒரு மக்கள் விரோதச் செயல் என்றவர் தற்பொழுது 'மக்களால் தெரிவு செய்யப்பட்ட' நவாப்செரீப் அரசைக் கலைத்தபோது ஜனாதிபதியின் செயலை ஆதரிக்கின்றார். இந்நிலையில் பாகிஸ்தானில் நடைபெறுவதை ஒரு வகையில் தனிமனித ஆட்சியே என்றோ, இராணுவத்தின் துணையுடன் மேற்கொள்ளப்படும் ஒருவகை ஆட்சி என்றேதான் குறிப்பிட வேண்டும்.

இதேவேளை நீண்ட ஜனநாயக பாரம்பரியமுள்ள நாடு என்று தன்னைக் கூறிக் கொள்ளும் சிறிலங்காவின் ஜனநாயக ஆட்சியில் இன்று துப்பாக்கிகளே அரசியலைத் தீர்மானிப்பவையாகி விட்டன. ஒரு தேசிய இனத்தின் உரிமையை மறுக்க முற்பட்டமையும், ஒரு கட்சி ஆட்சிமுறையிலான 'ஜனநாயக அமைப்பை' புகுத்த முற்பட்டதன் விளைவு இன்று சிறிலங்கா அரசியலில் துப்பாக்கிகளின் கைகளைப் பலப்படுத்தியுள்ளன. ஏறத்தாழ இதேபோன்ற ஒரு நிலையே பங்களாதேசிலும் காணப்படுகிறது.

இவ்வாறான தென்கிழக்காசிய நாடுகளில் 'ஜனநாயகம்' சீரழிவதினாலேயே இந்நாடுகளுக்கு ஜனநாயக அமைப்பு முறையிலான ஆட்சி முறை அவசியமா என்ற கேள்வி எழும்பியுள்ளது. பிரித்தானியரால் இந்நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இப்'பாராளுமன்ற ஜனநாயகம்' எந்தளவிற்குப் பொருத்தப்பாடு உடையது என்பதை இப்பிராந்திய மக்கள் தீர்மானிக்க வேண்டிய காலகட்டம் வந்து விட்டது, அதாவது 'ஜனநாயகம்' அரசுகள் என்ற பேரில் அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய காலகட்டம் வந்து விட்டது. இல்லையேல், இவ்அரசியல் வாதிகளின் அதிகாரப் போட்டியில் மக்களும், நாடும் சிக்கிச் சீரழிய வேண்டியது தவிர்க்க முடியாததாகிவிடும்.

---

விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாகத் திருக்கோவில் பகுதியைச் சூழவுள்ள வயல்களில் சிறிலங்காவின் விசேட அதிரடிப்படையினர் பாரிய தேடுதல்வேட்டையில் ஈடுபட்டுள்ளதாகவும் அதனால் விவசாயிகள் எவரும் வயல்களுக்கு மறு அறிவித்தல் தேசத்தில் நெல் விதைப்பிற்கு ஆயத்தமாகவிருந்த பெரும் பரப்பிலான நிலங்களில் விதைப்பு மேற்கொள்ளமுடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும், விதைப்புக்கு ஆயத்தம் செய்யப்பட்ட முளை நெல் சேதமடைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## மகன் வீட்டிற்கு வராமையால் சிப்பாயின் தாய் தற்கொலை

(கொழும்பு)

மன்னாரில் கடமையாற்றும் இராணுவத்தைச் சேர்ந்த தமது மகன் புதுவருடத்திற்கு வீடுதிரும்பாததினால் விரக்தியுற்ற அவரின் தாய் நஞ்சுக்கிழங்கு உட்கொண்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று களுத்துறை மாலாப என்ற இடத்தில் நிகழ்ந்துள்ளது.

இவரின் மகனான இராணுவச்சிப்பாய் மன்னாரில் கடமை புரிந்து வருகிறார். இவர் கடந்த நான்கு மாதகாலமாக வீடுதிரும்பவில்லை. ஒன்றரை மாதங்களாக இவரிடமிருந்து கடிதம் ஏதும் வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மனமுடைந்திருந்த இவரின் தாயார், மகன் புதுவருடத்திற்கும் வராததினாலும் அதற்கு முதல் நாள் 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கேள்வியுற்றதினாலும் விரக்தியுற்ற நிலையில் நச்சுக்கிழங்கு உண்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

---

16-8-92 இல் நடாத்தப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் பரீட்சையில் நூற்றி ஐம்பது புள்ளிகளுக்கு மேல் பெற்ற சுமார் ஆயிரம் பேர் மட்டுமே தமது சேவையில் உறுதிப்படுத்தப்பட்டு பட்டதாரிச்சம்பளம் வழங்கப்பட உள்ளார்கள் என வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மத்திய அரசாங்கத்தாலும், மாகாண அரசாங்கத்தினாலும் நியமிக்கப்பட்ட சுமார் ஐயாயிரத்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் இலங்கை பூராவும் இப்பரீட்சையை எடுத்துள்ளார்கள். இவர்களுக்கு கல்வி, விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களில் இப்பரீட்சை நடாத்தப்பட்டது. இவர்கள் இப்பரீட்சையில் பெற வேண்டிய ஆகக்குறைந்தது 55 புள்ளிகளுக்கு மேல் பெற்றால் இவர்கள் தமது நியமனத்தில் உறுதி செய்யப்பட்டு பட்டதாரிச் சம்பளம் வழங்கப்பட உள்ளார்கள் என வகிமா/கஅ/க.செய/ஆங்/23 இலக்க 7-4-93 கடிதப்படி சகல கோட்ட மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்குகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு எம். ஏ. சி. மொகைதீன் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இவ்வாறு புள்ளிகள் பெற்றுள்ளவர்களின் சேவையை உறுதிப்படுத்தி இருபிரதிகளை தமக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் இக்கடிதம் மூலம் பணித்துள்ளார்.

மேலும் வெளிவந்துள்ள இப்பரீட்சை முடிவின்படி யாழ். மாவட்டத்தில் சுமார் முப்பது பேர்மட்டுமே 150க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள். இதில் நீர்வேலியைச் சேர்ந்த செல்வி பாலநாகேஸ்வரி 203 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற பட்டதாரி பயிலுநர் ஆசிரியராக உள்ளார். (17)

---

இந்நிகழ்விற்கு தென்மராட்சி பிரதேசச் செயலாளர் திரு.யூ. சுந்தரம்பிள்ளை தலைமை வகித்தார் மட்டுவில் யூனியன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி பெருந்திரளான மக்கள் மத்தியில் நடைபெற்றது.

பிரதமவிருந்தினராக யாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல் பங்குபற்றினார். (42)

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் கூடிய புள்ளிகளைப் பெற்று சாம்பியனானது.

இப்போட்டியில் இரண்டாவது இடத்தினை மாமுனை கலைமகள் விளையாட்டுக் கழகமும், மூன்றாவது இடத்தினை கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகமும், நான்காவது இடத்தினை செம்பியன்பற்று தெற்கு செம்பியன் விளையாட்டுக் கழகமும், ஐந்தாவது இடத்தினை வத்திராயன் வடக்கு உதயசூரியன் விளையாட்டுக் கழகமும், ஆறாவது இடத்தினை ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழகமும் பெற்றன.

இப்போட்டியில் பதினொரு விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

---

# ஜெயலலிதாவை பதவிவிலக கருணாநிதி வலியுறுத்து

(சென்னை)

தமிழக அரசு தேர்தல் விதிமுறைகளை மீறியிருப்பதாக தேர்தல் கமிஷன் அறிவித்து ராணிப்பேட்டை சட்டமன்ற இடைத்தேர்தலை ரத்து செய்திருப்பதாலும், 175 ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுககான நியமனங்களில் ஊழல் இடம் பெற்றிருப்பதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருப்பதாலும், இவற்றிக்கு பொறுப்பேற்று தமிழக முதல்வர் ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்று தி. மு. க தலைவர் மு. கருணாநிதி கோரியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தேர்தல் கமிஷனும்., உயர் நீதிமன்றமும் தீர்ப்பு அளித்து விட்ட பிறகும் ஜெயலலிதாவின் அரசு பதவியில் நீடிப்பதற்கு எந்த முகாந்திரமும் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை தமிழகத்தில் கிறிஸ்தவர்களாக மதம்மாறிய வன்னிய சமூக மக்களும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக கருதப்பட்டு சலுகைகள் வழங்கப்படும் என்றும் கிராம ஊழியர்களின் தொகுப்பு ஊதியம் அதிகரிக்கப்படும் என்றும் ஜெயலலிதா அறிவித்திருப்பதானது. அ. இ. அ. தி. மு. க. அரசு அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டிருப்பதை நிரூபிப்பதாக தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி கூறியுள்ளது. இதற்காக அ. இ. அ. தி. மு. க. அரசு மீது சட்டநடவடிக்கை எடுக்கபட வேண்டும் என்று அது தேர்தல் கமிஷனிடம் வலியுறுத்திக் கேட்டுள்ளது.

## பேரவை உறுப்பினர்களுக்கு ஆளுநர் தேநீர் விருந்து

(சென்னை)

தமிழக சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு மாநில ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங் நேற்று முன்தினம் மாலையில் தேநீர் விருந்து ஒன்றை அளித்தார். இந்த தேநீர் விருந்தில் முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா, அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1,11000 இலங்கைத் தமிழர் தமிழ்நாட்டில் உள்ளனர்

### சட்டசபையில் தகவல்

(சென்னை)

தமிழ்நாட்டில் தற்போது ஒரு லட்சத்து பதினோராயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தங்கியுள்ளனர். இவர்களில் 80,331 பேர் 132 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 30,977 பேர் காவல் நிலையங்களில் பெயர்களைப் பதிவு செய்து விட்டு முகாம்கள் அல்லாத இடங்களில் வசித்து வருகின்றனர்.

இந்தத் தகவல்களை தமிழக சட்டப்பேரவையில் மாநில நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் நேற்று முன்தினம் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், இவர்களுக்காக மாநில அரசு கடந்த ஆண்டில் 14 கோடியே 18லட்சம் ரூபாவை செலவு செய்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

---

## எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

தமிழ்நாட்டில் அ. இ. அ. தி. மு க. ஆட்சியில் ஜனநாயகம் நிலவவில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் முகமாக பல்வேறு எதிர்க்கட்சிகளும் மாநில அரச அலுவலகங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டன. இந்த ஆர்ப்பாட்டங்களில் சுமார் இருபதாயிரம் பேர்வரையில் கலந்துகொண்டதாகக் கூறப்படுகிறது.

## அணு ஆயுதம் பற்றி கவலைப்படவில்லை

[டில்லி]

பாகிஸ்தானிடம் அணு ஆயுத வலிமை இருக்கின்றதா என்பது பற்றி இந்தியா கவலைப்படவில்லை என்று பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திருமதி மல்லிகா அர்ஜுன் கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு துறையின் வரவு செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய அவர் எந்தவொரு இறுதி விளைவுக்கும் இந்தியா தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் பாகிஸ்தானுடன் சமாதானம் பேண இந்தியா எடுத்த முன் முயற்சிகளுக்கு இஸ்லாமாபாத் ஆதரவு காட்டவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

---

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் கரையோரப் பகுதிகளில்நிலை கொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல்நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் பின்னரவு 1.05 மணியளவில் பொன்னாலை, கொத்தத்துறை, சுழிபுரம் புளியந்துறை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது எறிகணை வீச்சினையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

மேலும் இதேதினம் பின்னிரவு 1.25 மணியளவில் மாதகல் பகுதியில் உள்ள சிறிலங்கா ஆயுதப்படையினரின் காவல் நிலைகளிலிருந்து சுழிபுரம், பறாளாய் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ்விரு சம்பவங்களிலும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என தெரியவருகிறது. (4.

ஈழநாதம்

# தமிழ்நாடு கரையோரங்களில் பாரிய தேடுதல் வேட்டை

(சென்னை)

இராமநாதபுரமாவட்ட கடலோரப் பகுதியில் நேற்றுமுன் தினமிரவும் நேற்று அதிகாலையும் இந்தியப் படைகள் கடும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டன. இந்நடவடிக்கையின் போதுகடற்படையின் உலங்கு வானூர்திகளும் படகுகளும் ஈடுபட்டன மத்திய ஆயுதப் படை, தீவிரவாத ஒழிப்புப் படை, கடற்படை ஆகியவை இணைந்து தேடுதலை மேற் கொண்டன.

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற படகுகளும் மீன் பிடித் துத் திரும்பிய படகுகளும் நடுக்கடலில் வழிமறிக்கப்பட்டு மீனவர்களின் அடையாள அட்டைகள் பொலிசாரால் சோதனையிடப்பட்டன. சந்தேகத்திற்குள்ளானவர்களின் வீடுகளும் சோதனையிடப்பட் டன.

தஞ்சையிலிருந்துஇலங்கைக்கு பொருள்கள் கடத்தப்படுவதைத் தடுக்க கண்காணிப்பு நடவடிக்கை தீவிரமாக்கப்பட் டுள்ளது. இதற்கென கோடியாகரை, தோப்புத்துறை ஆகிய இடங்களில் 40 அடி உயரத்திற்கு கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட் டுள்ளன.

## மணிவாசகர் சபை பொன்விழாமலர்வெளியீடு

[யாழ்ப்பாணம்]

காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 2-ம் திகதி காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இம் மலர் வெளியீட்டு விழாவில் மாவை ஆதீனம் மகாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் மற்றும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள் ளனர்.

தொடர்ந்து பொன்விழா மலர் வெளியிட்டு, அதன்வெளியீட்டு உரையை ஆத்மஜோதி தவத்திரு நா. முத்தையா அவர்கள் நிகழ்த்தவுள்ளார். மலரின் முதற்பிரதியை திரு. ச.வி. முருகேசு பெற்றுக்கொள் வார். ஆய்வுரையும் இடம் பெறும்.

## இறுதிப் போட்டி

யாழ். செயலகத்தினால் நடாத்தப்படும் மாவட்ட மட் டத்திலான ஹொக்கி சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும், 3ஆம் இடத்திற்கான ஆட்டமும் இன்று பி. ப. 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பாஸ் வி. கழகத்தை எதிர்த்து பல்கலைக்கழக அணியும், மூன்றாம் இடத்திற்கான போட்டியில் வட்டு. ஒல்ட் கோல்ஸ் அணியை எதிர்த்து யாழ். ஜொனியனஸ் அணியும் மோதவுள்ளன.

## அத்துலத்முதலி கொலை

## அபகீர்த்தி ஏற்படுத்த புலிகளின் நடவடிக்கையாம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளே அத்துலத்முதலியைக் கொலை செய்தனர் என சிறிலங்கா சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

பெயர் குறிப்பிட விரும்பாத இவ் அதிகாரி புலிகளே திட்டமிட்டு இக்கொலையைச் செய்தனர் என வலியுறுத்திக் கூறினார்.

## நான் சுடப்பட்டுவிட்டேன் என்னைஎடுத்துசெல்லுங்கள்

### சூடுபட்ட லலித் அலறினார்

துப்பாக்கி வேட்டுக்களின் ஒலிஅடங்கியதும் லலித் 'நான் சுடப்பட்டுவிட்டேன் என்னை எடுத்துச் செல்லுங்கள்' என்று அலறினார். அதன்பின் அவர் வீழ்ந்துவிட்டார். இவ்வாறு கிருலப்பனை கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய ஜ.ஐ.தே மு. கொழும்பு வடக்கு அமைப்பாளர் உபுல் தம்மிக குமார நாயக்க தெரிவித்தார்.

சம்பவவேளை லலித் பேசிக் கொண்டிருந்தபோது தாம்அவரின் இடதுபக்கக் கதிரையில் இருந்ததாக அவர் தெரிவித் தார்.

லலித்தை உடனடியாக காரில் ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தபோது, தன்னை விரைவாக ஆஸ்பத் திரிக்குக் கொண்டு செல்லும் படி லலித் கேட்டுக்கொண்ட தாக அவருடன் அப்போது காரில் கூடச்சென்ற மெய்க் காவலரான சமிலா முனசிங்க தெரிவித்தார்.

## வெற்றுக்காட்போட் பெட்டிகள்

## ஏலவிற்பனை

எமது திணைக்களத்தில் பாவனைக்குகந்த வெற்றுக் காட்போட் பெட்டிகள் ஒரு தொகை 1993.05 04-ம் திகதி காலை 10.00 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. எனவே அவற்றினை ஏலத்தில் பெற்றுக்கொள்ள விரும்புவோர் அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு கல்வித்திணைக்கள களஞ்சியக் கிளையில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள். மேற்படி பெட்டிகளைப் பார்வையிட விரும்புவோர் அன்றையதினம் காலை 9.00 மணிமுதல் 10.00 மணி வரை களஞ்சியக்கிளையில் பார்வையிடலாம். ஏலத்தில் வெற்றி கொள்வோர் உடனடியாகப் பணத்தினை கணக் காளரிடம் செலுத்துவதுடன் அன்றைய தினமே அவற் றினை பொறுப்பேற்று அப்புறப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

பிரதேசகல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம். 28.04.1993.

இரா.சுந்தரலிங்கம் யாழ்/பிரதேச கல்விப்பணிப்பாளர்.

(சி/6528)

## மோட்டார் ஊர்தி பதிவு மே 8இல் முதற்கட்டம் பூர்த்தி

மோட்டார் ஊர்திகளைப் பதிவுசெய்யும் செயற்பாட்டின் முதற்கட்ட நடவடிக்கை 08-05-93 உடன் முடிவடைகிறது என மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட சகல மோட்டார் ஊர்தி உரிமையாளர்களுக்கும் அறியத்தருகின்றனர்.

சிறிலங்கா மோட்டார் ஊர்திப் பதிவு அல்லது இறக்குமதிச் சிட்டை உள்ளவர்கள் உடன் பதிவுகளை மேற்கொள்ளும்படி மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுள் ளனர்.

## நேற்றைய

ளது.

வன்முறைகளை தூண்டி ஜனநாயகத்திற்கு முரணான விதத்தில் தேர்தலை அரசாங்கம் நடத்தி அதன் மூலம் தன் பக்கம் வெற்றியை அடைய அரசாங்கம் ஆடும் கபடநாடகமே இது என அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட் டது.

கலவரம் வெடித்த இடங்களில் முதலில் ஊர்வலத்தை நோக்கி தாக்குதலை நடாத்தியது அரசாங்க ஆதரவாளரும், பொலிசாருமே ஆகும் என கூறப்பட்டுள்ளது.

## லலித்துக்கு

என ஜனாதிபதி செயலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது

ஆனால் ஜனாதிபதி செயலகத்தின் இந்த மறுப்பை நிராகரித்த லலித்தின் உறவினர்கள் மரணச்சடங்கிற்கு வருவதற்காக ஜனாதிபதி பிரேமதாசா அனுமதி கேட்டதாகவும் அதனை ஏற்க தாமே மறுத்ததாகவும் நேற்று அறிவித்தனர்.

## பண்ணைப் பாலம் பகுதியில் பதுங்கிய படைமீது தாக்கு

[யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணைப் பாலப் பகுதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 8-30 மணியளவில் பண்ணைப் பாலம் வல்லிவன கோவிலடி பகுதியிலேயே சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்தனர்.

இவர்கள்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற் கொண்டதில் இராணுவ தரப்புச் சேதவிபரங்கள் தெரிய வரவில்லை.

இத் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.

## கனத்தை

தக்கதாகும்.

இதேவேளை மயானப்பகுதியைச் சூழ உலங்குவானூர்தியிலிருந்து கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டதால் பத்திரிகையாளர் எவரும் அங்கு செல்ல முடியாத அளவிற்கு ஒரே புகை மண்டலமாக இருந்ததாக தெரிவிக்கப் படுகின்றது.

## நன்கொடை

பெருந்தொகையான பணத்தைப் பாடசாலைக்கு நன் கொடையாக வழங்குமாறும், இவ்வாறு நன்கொடை வழங்கினால் மட்டுமே பாடசாலையில் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் அனுமதிகோரி சென்ற மாணவர்களிடம் திட்டவட்டமாகக் கூறிவருவதாகவும்மாணவர்கள் கவலை தெரிவிக்கின்ற னர்.

இவ்வாறு வற்புறுத்திப் பெற்றுக்கொள்ளும் பணம் பாடசாலைக்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவே பெறப்படுவதாக பாடசாலை வட்டாரங்கள் கூறிவருகின்றன.

இதேவேளை இவ்வாறு பெறப்படும்பணம் பாடசாலை அபிவிருத்திச்சபைக்குரியதென வும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இவ்வாறுபெறப்படும் பணத்திற்கு 'அரச அனுமதி பெற்ற பற்றுச்சீட்டேவழங்கப் படவேண்டும் என்பதும் இவ்வாறு பாடசாலைகளில் புதிதாக அனுமதிகோரும் மாணவர்களிடமிருந்து நன்கொடை கோருவது சட்டவிரோதமானதென்பதும்குறிப்பிடத்தக்கது.

## மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம்

## மேதின விழா அழைப்பு

அன்பான கூட்டுறவாளர்களே!

''மேதின விழாவிற்கு அணிதிரள்வீர்''

மேதினத்தின் மேன்மையினை காதினிக்க பறை சாற்றவே கூட்டுறவாளர்களே ஒன்று சேர்வீர்.

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்க எல்லைப் பரப்பிலுள்ள கூட்டுறவாளர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள், பாவனையாளர்கள் அனைவரும் மேற்படி மேதின அணிவகுப்பில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். 01-05-1993 சனிக் கிழமை நண்பகல் 12-00 மணிக்கு மானிப்பாய் ப. நோ.

## தொப்பிகல காட்டில் கரும் மோதல்

### ஒரு சிப்பாய் பலி

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத் தில் தொப்பிகல காட்டுப் பகுதியில் நேற்று நடைபெற்ற மோதலில் ஓர் இராணுவச் சிப்பாய் பலியானதாகவும் மற்றுமொருவர் காயமடைந்த தாகவும் இராணுவப் பேச்சாமன தெரிவித்தார்.

தொப்பிகல காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுமண - 2 நடவடிக்கையில் நேற்று நடைபெற்ற மோதல் கடுமையானதாக இருந்தது என்றும் பிரிகேடியர் அங்கமன

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 28-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9199

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3937, 28-1085, 24-5241, 26 6077, 26-6398, 26-1285, 26-8878, 40-0774, 28-5491, 26-1791, 26-1221, 42-2364, 24-5454, 41-4176, 24-1209, 40-1079.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-3321, 41-7041, 26-0940, 24-6161, 26-9626, 26-7949, 42-6452, 26-3356, 27-2107, 28-4672, 24-4636, 26-1690, 26-2391, 27-3927, 26-2297.

# பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம். யாழ்/பிரதேச கல்விப்பணிப்பாளர்.
28.04.1993· (சி/6528)


மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம்

## மேதின விழா அழைப்பு

அன்பான கூட்டுறவாளர்களே!

''மேதின விழாவிற்கு அணிதிரள்வீர்''
மேதினத்தின் மேன்மையினை காதினிக்க பறை
சாற்றவே கூட்டுறவாளர்களே ஒன்று சேர்வீர்.

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்க எல்லைப் பரப்பிலுள்ள கூட்டுறவாளர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள், பாவனையாளர்கள் அனைவரும் மேற்படி மேதின அணிவகுப்பில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். 01-05-1993 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். பேரணியில் கலந்துகொள்ளச் செல்வதற்கு அனைவருக்கும் வாகன வசதி செய்யப்பட்டுள்ளது.

தலைவர்
மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம்
(சி/6530)



## 31- ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி நாகேஸ்வரியம்மா நடராசா (ஆனந்தி)

பிறப்பு 2-10-1947 இறப்பு 30-03-1993

நாட்கள் முப்பத்தொன்று
முடிந்ததம்மா - நீ இல்லை
இல்லம் இருண்டதம்மா - எம்
இதயம் இருக்கும் வரை
உன் நினைவு வாழுமம்மா.

பொன்னம்பலம் வீதி.
மானிப்பாய்.

கணவன், பிள்ளைகள்,
உறவினர்கள்,

[4784]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


பகுதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

கடந்த திங்கட்கிழமை காலை 8-30 மணியளவில் பண்ணைப் பாலம் வல்லிவன கோவிலடி பகுதியிலேயே சிறி

இவர்கள்மீது விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டதில் இராணுவ தரப்புச் சேதவிபரங்கள் தெரிய வரவில்லை.

இத் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லைஎனத் தெரிவிக்கப்படுகிறது.

## தொப்பிகல காட்டில் கடும் மோதல்

### ஒரு சிப்பாய் பலி

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொப்பிகல காட்டுப் பகுதிபில் நேற்று நடைபெற்ற மோதலில் ஓர் இராணுவச் சிப்பாய் பலியானதாகவும் மற்றுமொருவர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

தொப்பிகல காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுமண - 2 நடவடிக்கையில் நேற்று நடைபெற்ற மோதல் கடுமையானதாக இருந்தது என்றும் பிரிகேடியர் அங்கமன குறிப்பிட்டார்.

நொச்சிமோட்டை தடைமுகாம் பகுதியில்

## இராணுவத் தாக்குதலில் பொதுமகன் பலி

(வவுனியா)

நொச்சிமோட்டை பகுதியில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் பொது மக்கள் மீது நடத்திய தாக்குதலில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் நொச்சிமோட்டை சிறிலங்கா இராணுவ காவலரண்களிலிருந்து 700 யார் தூரம்வரை முன்னேறி அப்பகுதிகளில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினரே துவிச்சக்கரவண்டிகளில்பொது மக்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தினர் நடாத்திய இத்தாக்குதல்களினால் நெளபி பாலமோட்டை வவுனியாவைச் சேர்ந்த சோமசுந்தரம் சுந்தர் (வயது 35) என்பவர் பலியானார்.

## வெளியேறிய ராணுவம் மீது துணைப்படை தாக்குதல்

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவ அணிமீது விடுதலைப் புலிகளின் துணைப்படை அணியினர் துணிகர தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். துணைப்படையினரின் இத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் பின்வாங்கி முகாமுக்குள் சென்றனர்.

நேற்று முன்தினம் காலை 11.45 மணியளவில் முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து சிலாவத்தை பகுதியை நோக்கிசென்ற சிறிலங்கா இராணுவ அணி ஒன்றின் மீதே விடுதலைப்புலிகளின் துணைப்படை அணியினர் தாக்குதலை மேற்கொண்டனர். இதேவேளை சிறிலங்கா இராணுவத்தினரும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது துணைப்படையினரின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதலை கைவிட்டு முகாமுக்கு பின்வாங்கிச் சென்றனர். இத் தாக்குதலின்போது இராணுவ அணிக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

பொலிசாரின்

இதேவேளை நேற்றைய வன்முறைகளில் 30 க்கு மேற்பட்டோர் காயமடைந்ததாக பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது·

காக ஜனாதிபதி பிரேமதாசா அனுமதிகேட்டதாகவும் அதனை ஏற்க தாமே மறுத்ததாகவும் நேற்று அறிவித்தனர்.

கனத்தை

தக்கதாகும்.

இதேவேளை மயானப்பகுதியைச் சூழ உலங்குவானூர்தியிலிருந்து கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டதால் பத்திரிகையாளர் எவரும் அங்கு செல்ல முடியாத அளவீற்கு ஒரே புகை மண்டலமாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

### 28-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9199

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-3937, 28-1085, 24-5241, 26 6077, 26-6398, 26-1285, 26-8878, 40-0774, 28-5491, 26-1791, 26-1221, 42-2364, 24-5454, 41-4176, 24-1209, 40-1079.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-3321, 41-7041, 26-0940, 24-6161, 26-9626, 26-7949, 42-6452, 26-3356, 27-2107, 28-4672, 24-4636, 26-1690, 26-2391, 27-3927, 26-2297.


# பதவி வெற்றிடங்கள்

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பத்திரிகை நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. கல்வித்தராதரமும் அனுபவமுமுள்ளவர்கள் 02-05-93 ஞாயிறு காலை 10 மணிக்கு உரிய சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**(1) கணக்குப் பதிவாளர் - Book-keeper**

தொழில் நுட்பக்கல்லூரி அல்லது A. A. T. அல்லது அதற்குசமமான பரீட்சையில் கணக்கியல் சான்றிதழ் பெற்றவராகவும் 3 வருட அனுபவம் கொண்டவராகவும் இருத்தல் அவசியம்.

**(2) கணக்கு லிகிதர் - Accounts Clerk**

G. C. E. (A/L) கணக்கியலில் சித்தி அடைந்தவராகவும், 3 வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் அவசியம்.

**(3) அச்சக முகாமையாளர்- Printing Manager**

5 வருட அனுபவத்துடன் ஆங்கில அறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**(4) பக்கம் கட்டுநர் - Page Maker**

3 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

பத்திரிகை நிறுவனத்தில் தொழில் புரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.



# O/L 93 DAY CLASS

ESTD 1973 REGD. No J/7993
The Express Institute
IRUPALAI KOPAY

MATHS
MR. T. VARATHARAJAH

(சி/6526) ஏனைய பாடங்களுக்கும் அவ்வாறே திறமைமிக்க ஆசிரியர்கள்